

முதலமைச்சர் அவர்கள் 15.9.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் 2,000 ரூபாய் உதவித் தொகை வழங்கிடும்தி “அன்புக்கரங்கள்” திட்டத்தை தொடங்கி வைத்து, அக்குழந்தைகளுக்கு உதவித் தொகையினை வழங்கினார்.அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியில் நடைபெற்ற “அன்புக்கரங்கள்” திட்டம் தொடக்க நிகழ்ச்சியில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் பங்கேற்று, குழந்தைகளுக்கு “அன்புக்கரங்கள்” திட்ட அடையாள அட்டைகளை வழங்கினார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் து.வசந்தகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் ஆயக்காரன்புலம் 2 ஊராட்சியில் உள்ள இரா.நடேசனார் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 75 ஆம் ஆண்டு பவள விழாவில் மாவட்ட பொறுப்பு அமைச்சர், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு, பவளவிழா மலரை வெளியிட்டார். உடன் நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம் மாநில தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. மறைமலை, ஒன்றிய கழக செயலாளர் உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், வேதாரண்யம் நகர கழக செயலாளர் மா.மி.புகழேந்தி பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ். ஈ. பழனியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

# நடிகர் விஜய்க்கு கூட்டம் வருவது - வாக்காக மாறுமா?

## அமைச்சர் எஸ்.ரகுபதி கேள்வி!



புதுக்கோட்டை, செப்.18-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் புதுக்கோட்டை மாலையிடு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக கனிமவளத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்ல பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த செயற்குழு கூட்டத்தில் நேற்று கரூரில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டிற்கு சிறப்பான முறையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து அனைவரும் செல்ல வேண்டும் என்றும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என தமிழக முதல்வர் கூறிய வார்த்தைகளை பிளக்ஸ் போர்டுகளாக தயார் செய்து இந்த செயற்குழு கூட்டத்தில் வைக்கப்பட்டிருந்தது.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த தமிழக கனிமவளத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி.

2011 தேர்தலில் நடிகர் வடிவேலுக்கு கட்டுக்கடங்காத கூட்டம் வந்தது. அதெல்லாம் ஓட்டுக்களாக மாறியதா?

ஆகவே நடிகர் விஜய்யும் வடிவேலும் நடிகர்கள் தான் அவர்களுக்கு கூட்டம் கூடத்தான் செய்யும்...

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் திருச்சியில் நடத்திய தேர்தல் பரப்புரைக்கு தமிழகம் முழுவதும் உள்ள அவரது ரசிகர்கள் மற்றும்.

தொண்டர்களை ஒரே இடத்தில் அடைத்து வைத்து மக்களுக்கு பல வகையில் தொந்தரவு கொடுத்து இந்த பிரச்சார கூட்டத்தை நடத்தியுள்ளார் எனக் கூறிய அமைச்சர் எஸ். ரகுபதி.

திராவிட முன்னேற்றக் கழகம் மக்களை சந்திப்பதற்கு என்றைக்கும் அஞ்சியதில்லை.

மக்களுக்கு கொடுத்த 90% தேர்தல் வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றி உள்ளோம். அதனால் நாங்கள் தைரியமாக மக்களை சந்திப்போம். மக்களை சந்திப்பதற்கு எங்களுக்கு அச்சமில்லை.

தமிழக மக்கள் திமுக கழகத்தின் மீதும் தமிழக முதல்வர் தளபதி மீதும் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். அதை அவர் பல தேர்தல்களில் நிரூபித்துள்ளார். மக்களின் நம்பிக்கையை பெற்ற முதல்வர் என இந்தியாவிலேயே நிரூபித்த ஒரே தலைவர் நமது தமிழக முதல்வர் தளபதி தான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை அனைத்து கட்சிகளும் விமர்சனம் செய்வதற்கு பழுத்த மரத்தில் தான் கல்லடி படும். ஆதலால் தி.மு.க.வை நோக்கி வரும் விமர்சனங்களை நாங்கள் பொருட்படுத்தவில்லை.

எல்லா கனைகளும் எங்களை நோக்கி பாயும் பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் அசைக்க முடியாத சக்தியாக உள்ளது.

தமிழக வெற்றிக்கழக திருச்சி பிரச்சாரத்திற்கு பள்ளி மாணவர்களை அழைத்து வந்து கூட்டத்தை கூட்ட வேண்டிய கட்டாயத்தில் தமிழக வெற்றிக்கழகம் உள்ளது. ஆதலால் தான் அக்கட்சியின் தலைவர் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் கூட்டம் கூட்டுவதற்காக அவர் பிரச்சார கூட்டத்தை நடத்தி வருகிறார்.

தமிழக வெற்றிக்கழக தேர்தல் பிரச்சாரத்தால் தி.மு.க.வின் வாக்கு வங்கிக்கு எந்த பாதிப்பும் இல்லை. தமிழக வெற்றி கழக பிரச்சார கூட்டத்தில் பொது சொத்துகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது பற்றி கேட்ட பொழுது அது பற்றி சட்டம் தன் கடமையைச் செய்யும் என கூறினார்.

மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் கூட்டத்தை ஏற்பாடு செய்துவிட்டு அவசர தேவைக்காக ஆம்புலன்ஸ் வரும் பொழுது அதனை விமர்சனம் செய்யக்கூடாது. ஆம்புலன்ஸ் சேவையை பிரச்சாரக் கூட்டத்திற்குள் வரச்செய்து கூட்டத்தை கலைக்க வேண்டிய அவசியம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடையாது. நாங்கள் எதையும் நேர்மையாக சந்திக்க கூடியவர்கள் .... துணிச்சல் மிக்கவர்கள் தைரியமிக்கவர்கள் .


இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பொம்மிடி,பி.பள்ளிப்பட்டி, பையர்நத்தம் போதக்காடு மெணசி பூதநத்தம் ஆலாபுரம் கோபாலபுரம் ஆகிய ஊராட்சிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதி மொழி ஏற்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஜாகிதாசெரீப்,வே.செல்வன்,உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நீலகிரி காந்தல்ராஜ்
### செப்டம்பர் 18 (1981)



**நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளராகப் பணியாற்றியவர்.**

**நெருக்கடி நிலையை எதிர்த்து மிசா கைதியாக இருந்தவர்.**

**இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்து நடைபெற்ற மறியலில் பங்கேற்று சிறையிலிருந்தபோது மரணமடைந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

மக்களை ஒன்றிணைக்கும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில்

# தர்மபுரி மாவட்டத்தில் 3,39,349 பேர் சேர்ப்பு!

## முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் பேட்டி!



தர்மபுரி,செப்.18-

மக்களை ஒன்றிணைக்கும் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தில் 3,39,349 பேர் சேர்ந்துள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாயவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் முன்னாள் அமைச்சர் தி.மு.க. மேற்கு மாவட்ட செயலாளர் பழனியப்பன் செய்தியாளர்களை சந்தித்தார். தமிழக முதல்வர் அவர்களால் ஜூலை 1ஆம் தேதி அன்று ஓர் அணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தை ஒன்றிய பிஜேபி அரசை எதிர்த்து தமிழ்நாடு மக்களை ஒன்றிணைக்கும் வகையில் ஊரணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தை துவக்கினார். இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட 70 நாட்களில் தர்மபுரி மாவட்டத்தில் 3 லட்சத்து 39 ஆயிரத்து 349 பேர் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். குடும்பத்தைப் பொறுத்தவரை ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 617 குடும்பங்கள் சேர்ந்து இருக்கின்றனர்.

செப்டம்பர் 15 அன்று அண்ணாவின் பிறந்த நாள் அன்று உறுதி மொழியை ஏற்றுக் கொண்டு இரண்டாம் கட்ட வேலையில் ஈடுபட்டு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 897 பாகங்களில், பாகவாரியாக உறுதிமொழியை ஏற்க இருப்பதாகவும், எந்த வகையிலும் தலைகுனிய மாட்டோம், தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம், என்ற வகையில் உறுதி மொழியை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

பாகவாரியாக, தொகுதி வாரியாக, ஒன்றியம் வாரியாக என கலந்து கொள்கின்றனர். பாகவாரியாக எடுக்கப்பட்ட இந்ததீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக தான் இந்த கூட்டம் கூட்டப்பட்டு இருப்பதாகவும் மூன்றாம் கட்டமாக தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படி ஓரணியில் தமிழ்நாடு விளக்கப் பொதுக்கூட்டம் தலைமை கழக அறிவிப்பின்படி தருமபுரி மாவட்டத்தில் நடத்தப்பட இருப்பதாகவும், தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களை இணைக்கின்ற ஒரு முக்கிய அம்சமாக ஓர் அணியில் தமிழ்நாடு வெற்றி பெற்று இருக்கிறது என்றார், தொடர்ந்து பேசிய அவர் தமிழ்நாட்டினுடைய உரிமைகளை பாதுகாக்கப்பட வேண்டும், தமிழ்நாட்டின் உணர்வுகளை பாதுகாக்கவும், தமிழ் மொழியை பாதுகாக்கவும் தமிழக முதல்வர் அவர்களால் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என தெரிவித்தார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக, கரூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள, பேரறிஞரின் திருவுருவச் சிலைக்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.



தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், வல்லம் பேரூராட்சியில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையை தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., ச.முரசொலி எம்.பி. ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, ஒன்றிய செயலாளர்கள் தோ.அருளானந்தசாமி, செல்வகுமார், பேரூர் செயலாளர் கல்யாணசுந்தரம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மீஞ்சூர் க. சுந்தரம்
### செப்டம்பர் 18 (2024)



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்ப்பு கொண்டு பணியாற்றத் தொடங்கினார்.**

**மீஞ்சூர் ஒன்றியப் பிரதிநிதி, ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்ததோடு, கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் – மாநில ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1989,1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும் – பால்வளத் துறை அமைச்சராகவும் இருந்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**2023ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்,“அண்ணா விருது” வழங்கிச் சிறப்பித்ததுடன், “கழகப் பணியிலும், மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட இவரது மறைவு பேரிழப்பாகும்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**